DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 43/2022**

**அ.சா.– 7**

| | |
|---|---|
| பெயர் : திரு. சுதாகர் | கிராமம்: சின்னப்பநாயக்கன் பாளையம் |
| த/பெ. : திரு. காளியப்பன் | தாலூக்கா : வாழப்பாடி |
| வயது : 46 | தொழில்: கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 19th day of March, 2025.

( எதிரி ஆஜர் மற்றும் எதிரியின் வழக்குரைஞர் ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் தற்பொழுது வாழப்பாடி தாலூக்கா, சின்னப்பநாயக்கன்பாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் சேலம் மாவட்டம், அத்தனூர்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபொழுது 02.08.2021ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் நானும், எனது உதவியாளர் கோவிந்தன் என்பவரும் பணியிலிருந்தோம். அத்தனூர்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இளமதி என்பவர் தனது கணவர் மணிகண்டன் என்பவரை கொலை செய்துவிட்டதாக எனது அலுவலகத்திற்கு வந்து சொன்னார். நான் இளமதி என்பவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இளமதி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை படித்து காண்பித்தேன். இளமதி என்பவர் வாக்குமூலத்தை ஒப்புக்கொண்டார். ஒப்புதல் வாக்குமூலத்தில் இளமதி என்பவர் கையெழுத்து செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம். நான் தனி அறிக்கையை தயார் செய்தேன். இளமதி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் – **அ.சா.ஆ.–6** ஆகும். நான் தயார் செய்த தனி அறிக்கை – **அ.சா.ஆ.– 7** ஆகும்.

கிராம நிர்வாக அலுவலகத்திலிருந்து நானும் எனது உதவியாளர் கோவிந்தன் என்பவரும் இளமதி என்பவரை அழைத்துக்கொண்டு வாழப்பாடி காவல்நிலையத்திற்கு சென்றோம். காவல்நிலையத்திற்கு சென்று காவல் ஆய்வாளரிடம் இளமதி என்பவரையும், இளமதி என்பவர் கொடுத்த வாக்குமூலத்தையும், நான் தயார் செய்த தனி அறிக்கையையும் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் பெண் காவலர் முன்னிலையில் இளமதியை கைது செய்து விசாரணை செய்தார். அந்த விசாரணையின்போது காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் நானும் எனது உதவியாளர் கோவிந்தன் என்வரும் உடன் இருந்தோம். காவல் ஆய்வாளரிடம் எதிரி இளமதி என்பவர் எந்த அச்சுறுத்தலுமின்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி இளமதி என்பவர் தனது கணவரை கொலை செய்துவிட்டதாக கூறினார். எதிரி கொலை செய்ய பயன்படுத்திய கட்டை, நைட்டி ஆகியவைகளை தன்னை கூட்டிச்சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். எதிரி இளமதி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளர் கோவிந்தன் என்பவரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி – **அ.சா.ஆ.–8** ஆகும்.

எதிரி இளமதி என்பவர் அவரது வீட்டிற்கு கூட்டிச்சென்றார். காவல் ஆய்வாளருடன் நானும், கோவிந்தன் என்பவரும் சென்றோம். எதிரி கொலை செய்த இடத்தை காவல் ஆய்வாளரிடம் காட்டினார். எதிரி இளமதி கொலை செய்ய பயன்படுத்தி கட்டை மற்றும் நைட்டி ஆகியவற்றை அத்தனூர்பட்டி, கருப்பனார் கோவில் அருகில் உள்ள முட்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை மகஜர் மூலம் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது உதவியாளர் கோவிந்தன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். கைப்பற்றுதல் மகஜர் – **அ.சா.ஆ.–9** ஆகும். என்னிடம் காட்டப்படும் கட்டை மற்றும்

நைட்டி ஆகியவை தான் அன்றைய தினம் கைப்பற்றப்பட்டது ஆகும். கட்டை – **சா.பொ.–1** ஆகும். நைட்டி – **சா.பொ.–2** ஆகும். கட்டை மற்றும் நைட்டி ஆகியவைகளில் இரத்தக்கறை இருந்தது. கைப்பற்றப்பட்ட பொருட்களுடனும், ஆவணங்களுடனும் எதிரியுடனும் காவல்நிலையம் வந்தோம். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்)**:–

நான் 12 வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் வாழப்பாடியில் குடியிருந்தேன். என்னுடைய உதவியாளர் கோவிந்தன் கண்கட்டியாளான் கிராமத்தில் குடியிருந்தார். கிராம நிர்வாக அலுவலருக்கு உண்டான தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளேன். கிராம நிர்வாக அலுவலருக்கான நடைமுறை மற்றும் விதிமுறைகள் எனக்கு தெரியும். என்னுடைய வீட்டிலிருந்து அலுவலகம் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. உதவியாளர் கோவிந்தன் என்பவர் வீட்டிலிருந்து என்னுடைய அலுவலகம் சுமார் 14 கி.மீ. தூரத்தில் உள்ளது. நான் சாதாரணமாக என்னுடைய அலுவலகத்திற்கு காலையில் 9 மணிக்கு வருவேன்.

போலீசார் என்னிடம் போன் மூலமாக தகவல் சொன்னார்கள். 01.08.2021 ம் தேதி மாலை சுமார் 6 மணிக்கு போலீசார் என்னிடம் தகவல் சொன்னார்கள். அதனடிப்படையில் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவம் நடந்த இடத்தில் கூட்டமாக இருந்தார்கள். அந்த கூட்டத்தில் இளமதியும் அவரது தந்தை ஆகியோர்கள் இல்லை. பொதுமக்கள்தான் இருந்தார்கள். போலீசார் இரவு 9 மணிக்கு இறந்தவரின் உடலை எடுத்துச் சென்றனர். பிறகு நான் என்னுடைய அலுவலகத்திலேயே இருந்தேன். என்னுடன் இரவில் உதவியாளரும் இருந்தார். 01.08.2021 ம் தேதி இரவில் என் அலுவலகத்திற்கு போலீசார் இளமதியை அழைத்து வரவில்லை. 01.08.2021 ம் தேதி இரவில் போலீசார் என்னுடன் இருக்கவில்லை. எதிரி 02.08.2021 ம் தேதி காலை 6 மணிக்கு என் அலுவலகத்திற்கு வருவதற்கு

முன்பே எதிரியின் பெயர் மட்டும் எனக்கு தெரியும். என்னுடைய அறிக்கையில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்ததாக சொல்லியுள்ளேன். 02.08.2021ம் தேதி திங்கட்கிழமை ஆகும். காலை 6 மணி என்பதால் அந்த சமயத்தில் பொதுமக்கள் யாரும் என் அலுவலகத்தில் இல்லை. எதிரி இளமதி 02.08.2021ம் தேதி என் அலுவலகத்திற்கு வந்த பிறகு அதுகுறித்து போலீசாருக்கு தொலைபேசி மூலம் தகவல் சொல்லவில்லை.

01.08.2021ம் தேதி போலீசார் இரவில் சம்பவ இடத்தில் இருந்தார்கள். என் அலுவலகத்திலிருந்து சுமார் 50 மீட்டர் தூரத்தில் ரோட்டிற்கு மேற்கே சம்பவ இடத்தில் போலீசார் இருந்தனர். எதிரி சொல்லசொல்ல வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரி கொடுத்த வாக்குமூலத்தை என் கைப்பட எழுதினேன். அ.சா.ஆ.–6 ஆவணத்தில் 4வது பக்கத்தில் இடைச்செறுகலாக ஒரு வரி எழுதியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எதிரி கொடுத்த வாக்குமூலத்தை எழுதுவதற்கு ஒரு மணி நேரம் ஆனது. எதிரி கொடுத்த வாக்குமூலம் 4 பக்கங்கள் கொண்டது ஆகும். எதிரி கொடுத்த வாக்குமூலத்தை அசல் ஒன்று தயார் செய்து, பிறகு வாக்குமூலத்தை 2 ஜெராக்ஸ் நகல் எடுத்தேன். ஜெராக்ஸ் கடை என் அலுவலகத்திற்கு எதிரில் உள்ளது. அ.சா.ஆ.–6 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் எதிரியின் கையெழுத்தை வாங்கினேன். அ.சா.ஆ.–6 ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் எதிரியின் கையெழுத்தை வாங்கவில்லை.

அ.சா.ஆ–6 ஆவணம் பதிவு செய்யப்பட்ட பிறகு போலீசாரிடம் எனது அலுவலகத்திற்கு வருமாறு போன் செய்யவில்லை. வாக்குமூலத்தின் ஒரு ஜெராக்ஸ் நகலை வட்டாட்சியருக்கு அனுப்பவில்லை. எதிரியை காவல்நிலையம் அழைத்து செல்வதாக வட்டாட்சியருக்கு காலை சுமார் 7.30 மணிக்கு தகவல் சொன்னேன். நான் காலையில் 7.30 மணிக்கு காவல்நிலையம் சென்றுவிட்டு பிறகு எனது அலுவலகத்திற்கு அன்றையதினம் மாலை 3.30 மணிக்கு வந்தேன். 02.08.2021ம் தேதி நான் காவல்நிலையம் எதிரியுடன் சென்றபொழுது எனது அலுவலகத்தை

பூட்டிவிட்டு சென்றேன். நானும் எனது உதவியாளரும் எதிரியை ஆட்டோவின் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றோம். காவல்நிலையத்திற்கு காலை சுமார் 8 மணியளவில் சென்றோம். காவல் ஆய்வாளர் காவல்நிலையத்தில் அவரது அறையில் இருந்தார்.

நான் காவல் ஆய்வாளரிடம் கொடுத்த எதிரியின் வாக்குமூலத்தை காவல்ஆய்வாளர் படித்து பார்த்தார். பிறகு காவல் ஆய்வாளர் எதிரியை சுமார் 15 நிமிடங்கள் விசாரித்து வாய்மொழியாக விசாரித்து அதன்பிறகு எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தார். எதிரி கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் கணினியில் தட்டச்சு செய்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்நிலையத்தில் கணினியில் பதிவுசெய்த காவலர் கையெழுத்து செய்யவில்லை. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவுசெய்தபிறகு எதிரியிடம் கடைசி பக்கத்தில் கையெழுத்து வாங்கினார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்ய சுமார் ஒரு மணி நேரம் ஆனது.

பிறகு சம்பவ இடம் சென்று சுமார் 10 நிமிடங்கள் இருந்தோம். எதிரியின் வீட்டிலிருந்து சுமார் 50மீ தொலைவில் கருப்பண்ணார் கோவில் உள்ளது. கைப்பற்றுதல் மகஜரை போலீசார் எழுதினார். கைப்பற்றுதல் மகஜரில் காவல் ஆய்வாளர் கையெழுத்து போட்டார். கைப்பற்றுதல் மகஜரில் கட்டையின் அளவுகள் Over writing செய்யப்பட்டுள்ளது. அளவுகள் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 91 மற்றும் 21 என்பது மாற்றி எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தடயங்கள் கைப்பற்றப்பட்ட இடத்தில் சுமார் 10 நிமிடங்கள் இருந்தோம். என்னை காவல் ஆய்வாளர் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார். கைப்பற்றுதல் மகஜரில் எதிரி இளமதி கையெழுத்து செய்தார். ( பிறகு சாட்சி மாற்றி கைப்பற்றுதல் மகஜரில் எதிரி இளமதி கையெழுத்து செய்யவில்லை என்று கூறினார்).

நான் வட்டாட்சியரிடம் வாய்மொழியாக சம்பவ இடம் சென்று வந்தது பற்றி சொன்னேன். நான் வட்டாட்சியரிடம் சம்பவ இடம் சென்றுவந்தது சம்மந்தமாக எழுத்து மூலமான அறிக்கை கொடுக்கவில்லை. என்னுடைய வாக்குமூலத்தில் பச்சை கலர் நைட்டி என கலர் பற்றி குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி சம்பவ இடத்திற்கு அழைத்து சென்ற விவரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை. கருப்பண்ணார் கோவில் ஓடை முட்புதராக உள்ளது. அது திறந்தவெளி பகுதி ஆகும். நான் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரி என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், ஏற்கனவே எதிரி போலீசார் பாதுகாப்பில் இருந்தபொழுது ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல்நிலையம் சென்றபொழுது என் அலுவலகத்திலிருந்து சீல் எடுத்து சென்றேன்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Taken down by me in open Court and dictated to the Typist by me and read over to the deponent and acknowledged by him/her to be correct.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.